குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 184/2014

அ.சா.9

2025–ம் ஆண்டு மார்ச் 24–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 09–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயலட்சுமி | தொழில் | |
| தந்தை பெயர் | உமாபதி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.12 மணி,

Accused Mariyappan absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr.P.Gopal present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது ஓமலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் ஜெயபாரதி என்பவர் தற்போது எங்கு பணிபுரிந்து வருகிறார் என்று கண்டறிய முடியாததால். வழக்கு விசாரணை காலதாமமத்தினை தவிர்க்கும் பொருட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி ஆய்வாளரின் கையெழுத்து ஆவணங்களின் அடிப்படையில் நன்கு பரிச்சையம்.

2. கடந்த 21.05.2014–ம் தேதி காவல் ஆய்வாளராக ஜெயபாரதி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது 13.00 மணியளவில் சாட்சி கவிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று அதன் பேரில் நிலைய குற்ற எண்.4/2014 சட்டபிரிவுகள் 4 உ/இ 3 TNPHW Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்பு வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 13.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அரியபுத்திரன் மற்றும் சேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. பின்பு சாட்சிகள் கவிதா, செல்வன், ராஜா, தங்கபொண்ணு, மாரியப்பன், கனகராஜ், அரிபுத்திரன் மற்றும் சேகர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 21.05.2014 ம் தேதி 16.15 மணியளவில் துட்டம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே இருந்த எதிரி மாரியப்பன் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு வழக்கில் புலன் விசாரணை முடித்து சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் எதிரியின் மீது நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

6. இவ்வழக்கின் வழக்கு ஆவணங்களை நான் தயார் செய்யவில்லை என்றால் சரி. இவ்வழக்கின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. 20.05.2014 ம் தேதி ராஜா டீக்கடைக்கு முன்பு நடந்த சம்பவத்தின் அடிப்படையில் தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 னின் வீட்ருகே உள்ள டீக்கடைக்கு முன்பு சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

7. வழக்கு சம்பவம் 20.05.2014 ம் தேதி நடந்தது என்றாலும் புகார் 21.05.2014 ம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரி. புகார் அ.சா.1 எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடம் சுமார் 15 கி.மீ. தூரம் இருக்கும். சுமார் 1/2 மணி நேரத்தில் செல்லலாம் என்றால் சரி. சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் இவ்வழக்கு சாட்சிகள் சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றால் சரி.

8. இவ்வழக்கு சாட்சிகள் மொத்தம் 8 நபர்கள் என்றால் சரி. இவ்வழக்கு சாட்சிகள் அனைவரும் சம்பவம் 21.05.2014 மாலை 05.00 மணிக்கு நடந்ததாக போலீசார் விசாரணையில் கூறியுள்ளார்கள் என்றால் சரி. இறுதி அறிக்கையில் சம்பவம்

21.05.2014 ம் தேதி நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. பார்வை மகஜரில் 21.05.2014 ம் தேதி புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் தயாரித்ததாக கூறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

9. இவ்வழக்கு சாட்சிகள் அனைவரும் 21.05.2014 ம் தேதி மாலை 05.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் இவ்வழக்கு பார்வை மகஜர் 21.05.2014 ம் தேதி மதியம் 01.30 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது ஏற்றுக் கொள்ளதத்தக்கது அல்ல என்றால் சரி. தவறுதலாக சம்பவம் 21.05.2014 ம் தேதி நடந்ததாக சாட்சிகளின் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்டது.

10. அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் தனது கணவர் எதிரி தன்னை வைத்திருப்பதாக ஊர் முழுவதும் கூறுகிறார் என்றும், அதனால் தன்னை வீட்டைவிட்டு வெளியே செல்ல சொன்னதாகவும் கூறியுள்ளாரா என்றால் அ.சா.1 அவரது கணவர் தன்னை வீட்டை விட்டு வெளியே செல்ல சொன்னதாக கூறவில்லை. மற்ற விபரங்களை கூறியுள்ளார்.

11. அ.சா.1 புகாரில் தனது கணவர் தன்னை வீட்டை விட்டு வெளியே போக சொன்னதால் தான் வருத்தத்தில் பூச்சு மருந்து வாங்க சென்றதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 போலீசார் விசாரணையில் எதிரி அ.சா.1 வைத்திருப்பதாக ஊர் முழுவதும் சொன்னதாக கூறியுள்ளாரா என்றால் சரி. 20.05.2014 ம் தேதி மாலை 05.00 மணிக்கு ராஜா டீக்கடைக்கு முன்பு எதிரி என் மனைவியை வைத்திருப்பதாக கடைக்கு வந்தவரிடம் சொன்னார் என்றால் சரி.

12. அ.சா.6 கனகராஜின் போலீசார் விசாரணையில் ராஜா டீ கடைக்கு நான் சென்ற போது அ.சா.1 தன்னிடம் எதிரி அ.சா.1 ஐ வைத்திருப்பதாக சொன்னதாக கூறினாரா என்றால் இல்லை. விசாரணை அதிகாரி கூறியுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 கணவருக்கும் எதிரிக்கும் இடையிலான பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக இருந்தவந்த பிரச்சனையின் அடிப்படையில் அ.சா.2 தூண்டுதலின் பேரில் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் சரியாக விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

13. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.48 மணி**

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.